**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**------**

# IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI

| | | |
|---|---|---|
| Calendar | : | Sessions Case No.58 of 2020 |
| Miscellaneous | : | |
| Preliminary register | : | |
| Sessions | : | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for | : | Prosecution | : PW- 18 |
| | | Defence | : |
| | : | Court | : |

| | |
|---|---|
| Name | : Veraragavan |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 05th day of January 2024.**

**முதல் விசாரணை 3-ம் எதிரி ஆஜர் 1,2 எதிர்கள் ஆஜர் இல்லை மனுதாக்கள் செய்யப்பட்டு உள்ளது (கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

நான் வேடப்பட்டியில் குடியிருந்து ஊத்தங்கரையில் புகைப்பட கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். 24.02.2019 அன்று நான் எனது கடையில் இருந்த போது ஊத்தங்கரை காவல் நிலைய போலிசார் ஒரு வழக்கு சம்மந்தமாக மறுநாள் வருமாறு கேட்டு இருந்தார்கள். ஒரு வழக்கில் சம்மந்தப்பட்ட நபர்கள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க உள்ளதாகவும் புகைப்படம் எடுக்க கேட்டு இருந்தார்கள். நான் 25.02.2019 அன்று காலை சுமார் 5.30 மணிக்கு காவல் நிலையம் சென்றேன். காவல் நிலையத்தில் போலிசாரும், கிராம நிர்வாக அலுவரும், அவர் உதவியாளரும் மற்றும் 2 நபர்களும் இருந்தார்கள். காவல் நிலையத்தில் வைத்து வெங்கடேசன், பரதன் ஆகியோர்களிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். அந்த நிகழ்வினை நான் வீடியோ பதிவு செய்தேன். காவல் நிலையத்தில் இருந்து வித்தாயா மந்திர் பள்ளிக்கு பின்புறமாக உள்ள வெங்கடேசன் வீட்டிற்கு அவர் அழைத்து செல்ல போலிசாரும், கிராம நிர்வாக அலுவலரும், அவர் உதவியாளரும் மற்றும் நானும் சென்றோம். வெங்கடேசன் வீட்டில் ஒளித்து வைத்திருந்த துப்பாக்கி மற்றும் குண்டு எடுத்து ஆஜர் செய்ததை போலிசார் கைபற்றினார்கள். அந்த நிகழ்வை நான் வீடியோ பதிவு செய்தேன். அங்கு இருந்து எதிரி பரதன் சொந்த ஊரூரான ரெட்டிபட்டி சென்றோம். பரதன் வீட்டின் பரனில் வைத்து இருந்த துப்பாக்கி, குண்டு மற்றும் ரொக்கம் ஆகியவைற்ற ஆஜர் செய்ததை கிராம நிர்வாக அலுவர் மற்றும் உதவியாளார் முன்னிலையில் போலிசார் கைப்பற்றினார்கள் அந்த நிகழ்வை வீடியோ பதிவு செய்தேன். ரெட்டிபட்டி ஊருக்கு பின் புறமாக இருக்கின்ற ஏரிக்கு எதிரி பரதன் அழைத்து சென்றான். ஏரியில் இருந்த புளி மரத்து அடியில் இருந்து ஸ்லாட்டர்பின், பேக் மற்றும் சில பொருட்கள் ஆஜர்படுத்தியதை கைபற்றினார்கள் அந்த நிகழ்வைவும் வீடியோ பதிவு செய்தேன். பிறகு பதிவு செய்த வீடியோவையும், புகை படங்களையும் போலிசாரிடம் கொடுத்தேன். வீடியோ பதிவு 2 DVD-ல் பதிவு செய்து கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் DVD களும், புகைப்படங்களும் நான் கொடுத்தது ஆகும். மேற்படி ஆவணங்களின் தொகுப்பு அ.தா.சா.ஆ.12 ஆகு குறியீடு செய்யப்படுகிறது. இது சமந்தமாக போலிசார் விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை செய்யப்பட்டவில்லை.

SENTHIL KUMAR RAJAVEL

Subordinate Judge
Digitally signed by SENTHIL KUMAR RAJAVEL
Location: Uthangarai